திரு. ப. நெடுமறன் : தனிப்பட்டவர்கள் பாலிடெக்னிக் ஆரம்பிக்க முன்வந்தால் அரசாங்கம் அதுபற்றி ஆராயும் என்று அமைச்சர் அவர்கள் விடையளித்தார்கள். சம்பந்தப்பட்ட பாலிடெக்னிக்கை மதுரை ஷுகர்ஸ் லிமிடெட் என்ற தனியார் நிறுவனம் ஆரம்பிப்பதற்கு முன்வந்து அதற்கான மனுவை அரசுக்கு அனுப்பி அது பரிசீலிக்கப்படுகிறது என்று பதிலும் வந்திருக்கிறது, அதில் ஷுகர் டெக்னாலஜியை மையமாக வைத்து இந்த பாலிடெக்னிக்கை ஆரம்பிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை, திண்டுக்கல், பெரியகுளம் தாலுக்காக்களிலுள்ள கிராமங்களில் கரும்பு பயிரிடுகிற விவசாயிகள் நிறைய இருக்கிறார்கள். அவர்களது குழந்தைகள் படிக்கும் வகையில் ஷுகர் டெக்னாலஜியை மையமாக வைத்து ஒரு தனிப்பட்டவர் அந்த பாலிடெக்னிக்கை ஆரம்பிக்க முன்வந்திருப்பதால் அடுத்த கல்வியாண்டிலாவது இதற்கான அனுமதியை அரசு வழங்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் சொன்ன பதிலே, இவர்களுக்கு மட்டுமல்ல; மற்றவர்களுக்கும் பொருந்தும் என்ற முறையிலே சொன்னேன். இந்த சர்க்கரை ஆலை கம்பெனி விண்ணப்பம் செய்து, இவர்களுக்குத் தரவேண்டுமென்ற முறையிலே அல்ல. பொதுவாகவே சொன்னேன்; யார் வேண்டுமானாலும் இத்தகைய முயற்சியிலே இறங்கலாம். நம்முடைய தமிழ் மாநிலத்திற்குத் தேவையாக இருக்குமானால், அதை பரிசீலனை செய்யலாம். இப்போது விண்ணப்பித்த பிறகு பரிசீலனையில் பல கட்டங்கள் இருக்கின்றன. அது முடிந்த பிறகுதான், ஒரு முடிவான உத்தரவை போடவேண்டும். அடுத்த ஆண்டே செய்ய வேண்டுமென்றால், நான் இப்போது எந்த விதமான உத்தரவாதமும் தர முடியாது.

TRUTH ALONE TRIUMPHS

தமிழ் பல்கலைக் கழகம் நிறுவும் திட்டம்.

*வினா எண் 288—திரு. நன்னிலம் அ. கலையரசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தமிழ் பல்கலைக் கழகம் நிறுவுவது தொடர்பாக அரசு ''நிபுணர் குழு'' அமைக்கப் பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

1981 பிப்ரவரி 27]

(ஆ) தமிழ் நாட்டில் தமிழ் பல்கலைக் கழகம் ஒன்றினை நிறுவிட அரசுக்கு ஆலோசனை கூற பின்வரும் எண்மரை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது:—

1. டாக்டர் வ. சுப. மாணிக்கம், தலைவர்
துணை வேந்தர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை.

2. திரு. ம. பொ. சிவஞானம், உறுப்பினர்
தலைவர்,
தமிழ்நாடு சட்ட மேலவை,
சென்னை.

3. திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், உறுப்பினர்
திருச்சிராப்பள்ளி.

4. டாக்டர் வி. சி. குழந்தைசாமி, உறுப்பினர்
முன்னாள் தொழிற் நுட்ப கல்வி
இயக்குனர்.

5. டாக்டர் சாலை இளந்திரையன், உறுப்பினர்
புதுடெல்லி.

6. டாக்டர் மா. நன்னன், உறுப்பினர்
தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
சென்னை-1.

7. டாக்டர் சா. வே. சுப்பிரமணியன், உறுப்பினர்
இயக்குநர்,
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை-20.

8. திரு. ஆர். மீனாட்சி சுந்தரம், உறுப்பினர்-
சார்புச் செயலாளர், அமைப்பாளர்
கல்வித் துறை,
சென்னை-9.

(இக் குழுவின் முதற் கூட்டம் 20-12-1980-ல் நடைபெற்றது.)

திரு. நன்னிலம் அ. கலையரசன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், அப்படி அமைக்கப்பட இருக்கின்ற தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சையில் சரஸ்வதி மகால் நூல் நிலையம் சிறப்பாக செயல் பட்டு வருவதால், அந்தப் பல்கலைக் கழகத்தை தஞ்சையில் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1981 பிப்ரவரி 27

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இதை எப்படி, எங்கு அமைக்க வேண்டும் என்கிற நிலையை முடிவாக மேற்கொள்ளுகிறபோது, தஞ்சையைப் பற்றி நாம் பரிசீலிக்கலாம்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பல்கலைக் கழகம் துவக்குவதற்கு நிபுணர் குழு அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தப் பல்கலைக் கழகம் துவக்குவதற்கு நிதி ஒதுக்கி, நிபுணர் குழுவை அமைத்திருக்கிறார்களா? நிதி ஒதுக்கப்பட்டிருந்தால், எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. இந்தக் குழுவைப் போட்டிருப்பது தமிழ்ப் பல்கலைக் கழகம் எப்படி ஆரம்பிப்பது, எங்கே ஆரம்பிப்பது, அதை எப்படி நடத்துவது போன்ற அடிப்படைப் பிரச்னைகளை ஆராய்வதற்காக. மற்றப் பல்கலைக் கழகங்களைப் போல் அல்ல. ஆகவே, இந்த நிபுணர் குழுவின் அறிக்கை வந்தபிறகு தான் நாம் மேற்கொண்டு காரியங்களை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தென் சென்னையிலே பல்கலைக் கழகம் இருந்து கொண்டிருக்கிறது. வட சென்னையில் ஒரு பல்கலைக் கழகம் ஆரம்பித்து, வட சென்னை மக்கள் பாராட்டக்கூடிய அளவிலே அங்கே நிறுவப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வட சென்னையில் ஒரு பல்கலைக் கழகம், தென் சென்னையில் ஒரு பல்கலைக் கழகம் என்பதெல்லாம் கிடையாது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, எப்படியும் ஒரு பல்கலைக் கழகம் அமைக்கப்படும். இப்போது வட சென்னையிலே பல்கலைக் கழகம் இல்லை என்று சொல்ல முடியாது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பல்கலைக் கழகம் நிறுவுவது சம்பந்தமாக அமைக்கப்பட்டிருக்கும் நிபுணர் குழுவிலே மொழியியல் துறை நிபுணர் யாரும் இடம் பெறவில்லை. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு இதிலே பிரதிநிதித்துவம் இல்லை. இந்த இரண்டையும் அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

1981 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் சில தமிழ் அறிஞர்களைப் பொதுவாகப் போட்டிருக்கிறோமே தவிர, இந்தக் குழுவிலே எல்லாத்தரப்பினருக்கும் பிரதிநிதித்துவம் தந்து இதை ஆராய்ந்து பார்க்கும் நிலை இருந்தால், இது எந்தக்காலத்திலும் நடைபெற முடியாது. ஒவ்வொரு துறையிலும் சிறந்தவர்கள் இருக்கலாம். அதற்காக எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்ற நிலைக்குப் போனால், இந்தக் குழுவைப் போட்டு செயல்படுத்த முடியாது. இப்போது போட்டிருக்கின்றவர்களைச் சிறந்தவர்கள் என்று நாங்கள் கருதுகிறோம். அவர்கள் தருகின்ற அந்த அறிக்கையை அடிப்படையாக வைத்து, நாம் அந்தப் பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கான மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கலாம்.

கல்லூர் கஜலட்சுமி சிட்பண்ட்.

*வினா எண் 289—திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கல்லூர் கஜலட்சுமி சிட்பண்ட் (No. 125 AA XIII) இயங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) புதுக்கோட்டையிலுள்ள பல கஜலட்சுமி சிட்பண்ட் அங்கத்தினர்களுக்கு பரிசுத் தொகை ரூ. 5,000 நாளது வரையில் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் என்றால் மேற்படி பரிசுத் தொகையை அங்கத்தினர்களுக்கு பெற்றுத் தர என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை சீட்டுப் பதிவாளரால் விசாரணை செய்யப்பட்டது. கடலூர் மாவட்டத்தில் நடத்தப்படும் சில சீட்டுக்களில் சில இனங்களில் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்று தெரியவந்தது.

(இ) கடலூர் மற்றும் புதுக்கோட்டை சீட்டுப் பதிவாளரால் விசாரணைக்கு பின் சீட்டு நிதிச் சட்டத்தின் விதிமுறைகளை மீறியதற்கு வழக்குத் தொடரப்பட்டு சம்பந்தப்பட்ட

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS